**Starting time 11.30 A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 202/2014**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 16.06.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : மணி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>1, 3, 5</u>** <u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u> நான் இந்த தாவாவில் வாதி என்றால், ஆமாம். நான் இந்த தாவாவை பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஆமாம். நான் இந்த வழக்கில் புல எண் 621/17 மற்றும் 621/17-ல் கட்டியுள்ள வில்லை வீட்டையும், முன்புறம் உள்ள காலி இடத்தையும் தாவா சொத்தாக காட்டியுள்ளே என்றால், ஆமாம். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் தாவா புல எண்ணானது 627/11 என்று கூறியுள்ளேன் என்றால், ஆமாம்.

2. இந்த வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் பொன்னான் என்பவரின் குமாரர்கள் என்றால், ஆமாம். 3 முதல் 6 பிரதிவாதிகள் பொன்னானின் குமாரர்த்திகள் என்றால், ஆமாம். தாவா சொத்தானது ஆதியில் ஒரு ராமன் என்பவருக்கு பத்தியப்பட்டிருந்ததாகவும், அவருடைய சகோதரர்களான பொன்னான் மற்றும் மணிவேல் ஆகியோர்களிடமிருந்து நான் ஒரு பதிவு செய்யப்படாத கிரயப் பத்திரம் மூலம் 20.03.1999-ல் கிரயம் பெற்றதாக

குறிப்பிட்டுள்ளேன் என்றால், ஆமாம். அந்த பத்திரத்தையும் நான் எனது வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஆமாம். மேலும் ஒரு ராமு என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளதாகவும் 26.07.2000 தேதியன்று ஒரு பதிவு செய்யப்படாத கிரயப் பத்திரத்தின் மூலம் கிரயம் பெற்றதாகக் கூறி அந்த பத்திரத்தையும் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஆமாம். ராமுவிற்கு தாவா சொத்து எந்த காலத்திலும் பத்தியப்பட்டதல்ல என்றால், சரியல்ல, ராமுவிற்குத்தான் சொந்தமான சொத்து அது.

3. 22.03.1999 தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரயப் பத்திரம் போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால், அவ்வாறு இல்லை. அந்த பத்திரத்தில் பொன்னான் என்பவரின் கைரேகை அவருடைய கைரேகையே அல்ல என்றால், சரியல்ல. 26.07.2000 தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரயப் பத்திரமும் போலியனது என்றால், சரியல்ல. தாவா சொத்து ஆதியில் மும்முடியான் மகன் பொன்னான் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால், அது பொய். அந்த சொத்தானது பொன்னானுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பட்டா மூலம் பாத்தியப்பட்டிருந்தது என்றால், அதுவும் பொய், அரசாங்கத்தால் அவருக்கு பட்டா கொடுப்படவில்லை. எனவே, பொன்னானின் சகோதரருக்கு அந்த சொத்துக்களில் பாத்தியம் எதுவும் இல்லை. அந்த சொத்தானது ராமுவால் சம்பாதிக்கப்பட்ட சொத்தாகும்.

4. தாவா சொத்தானது ஒரு வீடு வடபுறம், தென்புறமாக இருபிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால், ஆமாம். வடக்கு பாகத்தில் 1-ம் பிரதிவாதி குடியிருக்கிரார் என்றால், ஆமாம். அந்த வீட்டின் கதவு எண் 5/184 என்றால், இல்லை, ஆரம்பத்திலிருந்தே 105/183 என்ற கதவு எண்தான் இருந்தது. நான் சொல்வது போல் 105/183 என்ற கதவு எண்ணே இருந்ததல்ல என்றால், சரியல்ல.

5. தாவா சொத்தின் தென்புறத்தில் உள்ள வீட்டை எனக்கு பிரதிவாதிகள்

வடகைக்கு விட்டுள்ளார்கள் என்றால், சரியல்ல, அது நான் சொந்தமாக வாங்கிய சொத்தாகும். நான் வசித்து வரும் வீட்டின் கதவு எண் 5/181 என்றால், ஆமாம். அந்த வீட்டிற்கு தனியாக மின் இணைப்பு பெறப்பட்டு அதை நானே செலுத்த வேண்டும் என்று என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டது என்றால், சரியல்ல, மின் இணைப்பே நான் தான் வாங்கினேன், அந்த வீட்டில் பிரதிவாதிகள் எதுவும் செய்யவில்லை. தாவா சொத்தில் உள்ள வீட்டுகளை பொன்னான் 1967-லிலேயே கட்டிவிட்டார் என்றால், பொய்யாகும். அதற்கு செலுத்த வேண்டிய வரிகளை பொன்னானே செலுத்தி வந்தார் என்றால், பொய்யாகும்.

6. பொன்னான் 04.11.2007-ல் இறந்துவிட்டார் என்றால், ஆமாம். அதற்கு பின்பு அந்த வீடு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால், அதுவும் பொய். நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொன்னான் இறந்த பிறகு மாத வாடகை ரூ.500/-க்கு எனக்கு வாடகைக்கு விடப்பட்டது என்றால், பொய். நான் அந்த வீட்டிற்கு 01.01.2014 தேதிவரையிலும் வாடகை செலுத்தி வந்தேன் என்றால், பொய். அதன் பிறகு பிரதிவாதிகள் அந்த வீட்டிற்கு வாடகையை உயர்த்தி கேட்டதால் நான் பொய்யான பத்திரங்களை தாவா சொத்தில் உரிமையில்லாதவர்கள் மூலம் தயாரித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், பொய்.

7. அந்த பொய்யான பத்திரங்களை காட்டி 2010-ம் ஆண்டு என் பெயரில் அந்த வீட்டிற்கு மின் இணைப்பை பெற்று இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பதிவு செய்யப்படாத கிரய பத்திரங்கள் மூலம் எனக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் ஏற்படாது என்றால், சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோராமல், நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் மட்டும் கேட்டுள்ளதால் இந்த தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்திற்கு உரிமையே இல்லாத

நான் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோர இயலாது என்றால், சரியல்ல.

8. தாவா சொத்து விவரத்தில் தென்வடல் 48 அடியும், கிழமேல் 27 அடியும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், ஆமாம். நான் சொத்தை கிரயம் வாங்கியதாக தாக்கல் செய்துள்ள பதிவு செய்யப்படாத கிரய பத்திரங்களில் தாவா சொத்தின் நீள அகலம் அதற்கு முரணாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. நான் வழக்குரையின் சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள விஸ்தீரணத்தில் தாவா சொத்தே அமைந்திருக்கவில்லை என்றால், சரியல்ல.

9. பொன்னானும் அவரது சகோதரர்களும் 05.09.2011 தேதியன்று தங்களுக்குள் ஒரு பாகப் பத்திய விடுதலைப் பத்திரத்தை எழுதி பதிவு செய்துள்ளார்கள் என்றால், ஆமாம். அந்த பத்திரத்தில் இந்த சொத்தையும், வேறு சில சொத்தையும் காட்டியுள்ளார்கள் என்றால், பொய். அந்த பதிவு செய்யப்பட்ட பாக பாத்திய விடுதலைப் பத்திரமே 1-ம் பிரதிவாதியின் தாவா சொத்தின் மீதான உரிமையை நிலைநாட்டும் என்றால், பொய். அந்த பத்திரம் சம்பந்தமாக நான் இன்றைய தேதிவரையிலும் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், பொய். அந்த பாகப் பாத்திய விடுதலைப் பத்திரம் செல்லாது என நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், ஆமாம். நான் சொல்வதுபோல எந்த நீதிமன்றத்திலுமே அதுபோல் எந்த வழக்கும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. அவ்வாறு நான் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்திருந்தால் அதற்கான ஆவணத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால், சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவதுபோல் எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக தற்போது பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

10. தாவா சொத்து தற்போது ரூ.5,00,000/- மதிப்பு பெறும் என்றால், சரியல்ல, ரூ.3,00,000/- பெறும். தாவா சொத்து மதிப்பான ரூ.3,00,000/- க்கு நீதிமன்ற கட்டணம் நான் செலுத்தவில்லை என்றால், சரியல்ல. ரூ.3,00,000/- மதிப்புள்ள சொத்து சம்பந்தமான வழக்கை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரையறை இல்லை என்றால்,

சரியல்ல. எனவே தாவா சொத்தைப் பொறுத்து இந்நீதிமன்றத்தில் என்னால் பரிகாரம் கோர இயலாது என்றால், சரியல்ல. இந்த நீதிமன்றத்திற்கு ஆள்வரையறையே இல்லை என்பதால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த பொய்யான தாவா பிரதிவாதிகளுக்கு அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 11.50 A.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி, பி.எஸ்.சி., எல்.எல்.எம்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.